## டிசம்பர் – 11 – திங்கள்
### புனித தமாசுஸ்

### “திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்” (ஏசா 35:4)

**முதல் வாசகம் : ஏசாயா 35 : 1 - 10**

பாலைநிலமும் பாழ்வெளியும் அகமகிழும் பொட்டல் நிலம் அக்களிப்படைந்து, லீலிபோல் பூத்துக் குலுங்கும். அது வளமாய்ப் பூத்துக் குலுங்கி மகிழ்ந்து பாடிக் களிப்படையும் லெபனோனின் எழில் அதற்கு அளிக்கப்படும் கர்மேல், சாரோனின் மேன்மை அதில் ஒளிரும் ஆண்டவர் மாட்சியையும் நம் கடவுளின் பெருமை யையும் அவர்கள் காண்பார்கள். தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள் தள்ளாடும் முழங்கால்களை உறுதிப் படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, ”திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள் இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார் அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்.” அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும் காது கேளாதோரின் செவிகள் கேட்கும். அப்பொழுது, காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர் வாய்பேசாதோர் மகிழ்ந்து பாடுவர் பாலைநிலத்தில் நீரூயஇற்றுகள் பீறிட்டு எழும் வறண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். கனல் கக்கும் மணல்பரப்பு நீர்த் தடாகம் ஆகும் தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும் குள்ளநரி தங்கும் வளைகள் எங்கும் கோரையும் நாணலும் முளைத்து நிற்கும். அங்கே! நெடுஞ்சாலை ஒன்று இருக்கும் அது ”தூய வழி” என்று பெயர் பெறும். தீட்டுப்பட்டோர் அதன் வழியாய்க் கடந்து செல்லார் அவ்வழிவரும் பேதையரும் வழி தவறிச் செல்லார். அங்கே சிங்கம் இராது. அவ்வழியில் கொடிய விலங்குகள் செல்வதில்லை, காணப்படுவதுமில்லை மீட்படைந்தவர்களே அவ்வழியில் நடப்பார்கள். ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர் மகிழ்ந்து பாடிக் கொண்டே சீயோனுக்கு வருவர் அவர்கள் முகம் என்றுமுள மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும் அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவார்கள் துன்பமும் துயரமும் பறந்தோடும்.

**பதில்பாடல் :** இதோ நம் இறைவன் வந்து நம்மை மீட்பார்

**நற்செய்தி : லூக்கா 5 : 17 - 26**

அக்காலத்தில் ஒரு நாள் இயேசு கற்பித்துக் கொண்டிருந்தபோது. கலிலேய, யூதேயப் பகுதிகளிலுள்ள எல்லா ஊர்களிலிருந்தும் எருசலேமிலிருந்தும் வந்திருந்த பரிசேயரும் திருச்சட்ட ஆசிரியர்களும் அமர்ந்திருந்தார்கள். பிணி தீர்ப்பதற்கான ஆண்டவரின் வல்லமையை அவர் கொண்டிருந்தார். அப்பொழுது சிலர் முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலோடு சுமந்துகொண்டு வந்து, அவரை உள்ளே கொண்டுபோய் இயேசுமுன் வைக்க வழி தேடினர். மக்கள் திரண்டிருந்த காரணத்தால் அவரை உள்ளே கொண்டுபோக அவர்களால் முடியவில்லை. எனவே அவர்கள் கூரைமேல் ஏறி ஓடுகளைப் பிரித்து அவ்வழியாய் மக்கள் நடுவில் அவரைக் கட்டிலோடு இயேசுவுக்கு முன் இறக்கினார்கள். அவர்களுடைய நம்பிக்கையைக் கண்ட இயேசு அந்த ஆளைப் பார்த்து, ”உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார். இதனைக் கேட்ட மறைநூல் அறிஞரும் பரிசேயரும், ”கடவுளைப் பழித்துரைக்கும் இவன் யார்? கடவுள் மட்டுமன்றிப் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்?” என்று எண்ணிக்கொண்டனர். அவர்களின் எண்ணங்களை உய்த்துணர்ந்த இயேசு அவர்களைப் பார்த்து, ”உங்கள் உள்ளங்களில் நீங்கள் எண்ணுகிறதென்ன? ”உம் பாவங்கள் உமக்கு மன்னிக்கப்பட்டன” என்பதா, அல்லது ”எழுந்து நடக்கவும்” என்பதா, எது எளிது? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, ”நான் உமக்குச் சொல்கிறேன் நீர் எழுந்து உம்முடைய கட்டிலைத் தூக்கிக் கொண்டு உமது வீட்டுக்குப் போம்!” என்றார். உடனே அவர் அவர்கள் முன்பாக எழுந்து, தாம் படுத்திருந்த கட்டிலைத் தூக்கிக்கொண்டு, கடவுளைப் போற்றிப் புகழ்ந்தவாறே தமது வீட்டுக்குப் போனார். இதைக் கண்ட யாவரும் மெய்ம் மறந்தவராய்க் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். அவர்கள் அச்சம் நிறைந்தவராய், ”இன்று புதுமையானவற்றைக் கண்டோம்!” என்று பேசிக் கொண்டார்கள்.

**தியானம்:** இன்று நாம் பல்வேறு காரணங்களால் முடக்குவாதம் உள்ளவர்போல் வாழ்கிறோம். உடலில் ஏற்படும் நோய்களும், மனதில் ஏற்படும் நோய்களும் நம்மையும் எழுந்து நடக்க விடுவதில்லை. உடல் பாதிப்பை விட மனதின் பாதிப்பு அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இன்று நடைபெறும் பல்வேறுவிதமான குற்ற சம்பவங்களுக்கு, மன நோய்தான் காரணமாக இருக்கிறது. பெற்றோரின் தவறும் அவர்களின் அக்கறையற்ற வளர்ப்பும் பிள்ளைகளை மனதளவில் பாதிக்கின்றது. வாழ்வில் ஏற்படும் தோல்விகளும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. அன்பு செய்ய அரவணைக்க ஆளில்லாத தனிமையும், மனதின் காயங்களும் சிலரை வன்முறைக்கு இட்டுச் செல்கிறது, சிலரை தற்கொலை செய்ய தூண்டுகிறது. எல்லாவற்றிற்கும் மனிதன் தான் காரணம். கடவுள் அல்ல. கடவுள் நம்மை தமது சாயலில்தான் படைத்தார். ஆனால் நாம்தான் மாற்று உருவம் அடைகின்றோம். பல்வேறுவிதமான சுமைகளை நமது தோளில் ஏற்றி சுமக்க முடியாமல் தள்ளாடுகிறோம். இன்றைய நற்செய்தியில் முடக்குவாத முற்றவரை விட அவரை சுமந்து வந்தவர்கள்தான் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் முடக்குவாத முற்றவரின் உறவினர்களாக, நண்பர்களாக இருக்கலாம். அவர் படும் வேதனையை புரிந்து கொண்டு யேசுவிடம் சென்றால் அவரின் துன்பம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வந்தார்கள். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. அதே நம்பிக்கை நமக்கும் வேண்டும். கட்டிலோடு நம்மையும் பிணைத்திருக்கும் நமது துன்பங்களும் நீங்க வேண்டுமென்றால் நாமும் கடவுளிடம் செல்ல வேண்டும். கணவன் சுமை என்று மனைவியும், மனைவி சுமை என்று கணவனும், பிள்ளைகள் சுமை என்று பெற்றோரும், வயதான பெற்றோர் சுமை என்று பிள்ளைகளும், நினைக்கின்ற இக்கால கட்டத்தில்தான் நாம் வாழ்கிறோம். அதனால் தான் திருமணமான சில மாதங்களில் விவாகரத்தும் பிரிவுகளும், அதிகரிக்கின்றன. வயோதிப இல்லங்களில் அனாதரவாக வாடும் உள்ளங்கள் எத்தனை? குடிப் பழக்கமும், போதைப் பொருட்களும் சுமைகளை அகற்றாது. அவற்றை பாவிப்பவர்கள் மற்றவர்களுக்கு சுமையாக மாறிவிடுகிறார்கள். எனவே நமது மனங்களை நாம் மாற்றுவோம். அப்போது முதல் வாசகத்தில் காணப்படுவது போல், நாமும் மகிழ்ச்சியை பூரிப்பை கண்டடையலாம். அப்போது சுமைகளும் சுகமாகும், மற்றவர்களின் சுமையையும் நம்மால் சுமக்க முடியும்.